தென்னாட்டுக் காங்கிரசும் "நான்செனஸ்" ஆகிறது!

திராவிடநாடு

மலர் 11 | 1—2—53 | இதழ் 31

விலை 2 அணா

பண்டித நேரு பட்டம் சூட்டுகிறார்

மொழியார்வம் முட்டாள்தனமாம்

'வெட்டவெளி'யில் வீசிய வார்த்தை

"நான்செனஸ்!"—இந்தச் சொல் அகில இந்திய ஜோதியாம் பண்டிதருக்குச் சொந்தமாகிவிட்டது சென்னைக்கு வந்து சென்றபோது, நம்மையெல்லாம் 'நான்செனஸ்' என்று அழைத்தார், அதனைப் பெரிதாக்கிப் பிரசுரித்தன, தேசிய ஏடுகள்! பிரமுகர்கள், கிண்டல் செய்தார்கள், "பார்த்தேளேல்லியோ, பண்டித நேரு போட்ட போட்டை!" என்ற பரவசத்தோடு. தேசிய நணபர்கள், கடந்த தேர்தலில் கவிழ்த்த முகத்தைத் தூக்கிப் பார்க்கக் கிடைத்ததோர் சந்தர்ப்பம் என்றெண்ணி, விறைப்பும் ஏளனமும் கலந்த பார்வையை வீசிக் காட்டினார்கள்! நாமோ, அவர்களின் சேட்டைகள் கண்டு, நகைத்தோம், நகைத்தோம் — எரியும் நெருப்பில் ஊற்றப்படும் எண்ணெய் அந்தச் சொல் என்றோம். ஆசியல் வானில், ஒரு மீளாத களங்கத்தைப் பண்டிதர், ஏற்படுத்திவிட்டார். அந்தச் சொல்லை வீசிய 'ஜார்' பரம்பரையின் பக்கம் அவரும் போக நேர்ந்ததே எனப் பரிதாப்பபட்டோம். இனிமேலாவது, இவ்வண்ணம் 'எச்சில் இலை' வார்த்தைகளை எடுத்தெறியார்! தவறை உணர்வார்—என நம்பினோம்.

"நீங்கள் நம்பலாம். ஆனால், அதன்படி நடந்து பழக்கமில்லையே எமக்கு!" என்ற வீம்புதான் காரணமோ, அல்லது "உங்கள் யாவரையுமே அவ்விதம்தான் நான் மதிக்கிறேன்" என்பதுதான் காரணமோ புரியவில்லை — மீண்டும், அதே 'நான்செனஸை' வீசியிருக்கிறார். இம்முறை, நம்மீது அல்ல! 'நாம் வேறு — தாங்கள் வேறு' என்ற வேற்றுமைக் கண்கொண்டு, நம்மைக் கேலி செய்தார்களே, தேசிய நண்பர்கள், அவர்கள்மீது!!

ஐதாராபாத்திலே, நாணல் நகரிலே, கூடிய காங்கிரஸ் மாநாட்டில், தென்னாட்டுக் காங்கிரஸ் முக்கியஸ்தர்களை, 'நான் செனஸ்' என்ற நாமம் சூட்டி அழைத்திருக்கிறார், அலகாபாத்தார்.

மாநாடு, 'வெட்டவெளி'யிலே நடைபெற்றதாம்! அந்த 'வெட்டவெளி' தாக்கிய வெப்பமோ அல்லது மாநாடு கூடிய இடம் 'வெட்டவெளி'யாகவே யிருந்ததாலோ தெரியவில்லை, வேகத்தோடு வீசியிருக்கிறார், அந்தச் சொல்லை.

மொழிவாரி மாகாணம் குறித்து தமிழ் நாட்டு நண்பர் ஆர். வி. சாமிநாதன் பேசினாராம்—அதையொட்டி ஆந்திர நண்பர் ஒருவரும், தெலுங்குத் தோழர் ஒருவரும் பேசியிருக்கிறார்கள்.

இவர்களது பேச்சை 'நான்செனஸ்' என்றார் — சினந்தார்—சீறினார், ஆசிய ஜோதி. அதுவும் சாதாரணமாக அல்ல; ஓர் அடைமொழிபோட்டு—'ஆவேசங் கலந்த முட்டாள்தனம்.'

பண்டிதரை, இத்தகைய "நான்செனஸ்" வீசச்செய்தோர், தென்னாட்டிலிருந்து சென்ற காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள். 'தென்னாட்டிலிருந்து சென்றோர்' — இவ்விதம் 'இந்து' இதழே கூறுகிறது.

அவர்கள் பேசினர்! அதனை 'நான்செனஸ்' என்று சீறினார்—செப்பினார்.

"ஆமாம்! அர்த்தமில்லாமல் பேசினால் கோபம் வாராதோ? வீணாக மொழி வெறி கொண்டு இங்கிருந்து சென்றோர், பேசியிருப்பர். அதனால், கண்டிக்க வேண்டியவரானார் நேரு. தரும்பைத் தூணாக்கிப் பிரமாதப்படுத்துகிறீயே!"—என்று கேட்க நினைக்கலாம், சிலர்.

அவர்களை, 'வெட்டவெளி'க்குச் சிறிது அழைத்துச் செல்வோம்! ஜனவரி 17ந் தேதி. காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில், மொழிவாரி மாகாணம் குறித்துத் தென்னாட்டினர்மட்டும் பேசவில்லை. வேறு சிலரும் பேசினர்!

ஆனால், தென்னாட்டினர் பேசும்போதுதான், பண்டிதர் குறுக்கிட்டாராம்—கோபித்தாராம் — 'நான்செனஸ்' என்றாராம்.

ஆர். வி. சாமிநாதன் பேசியது போன்றே குருமுக்கிங் பேசியிருக்கிறார்! லட்சுமிசந்த் பேசியிருக்கிறார்!!

அப்போது 'நான்செனஸை' வீசவில்லை, பண்டிதர்.

'ஆனால், 'தென்னாட்டுப் பிரதிநிதி'கள் பேசும்போது, 'நான்செனஸ்' வந்து விழுந்திருக்கிறது.

குருமுக்கிங், பஞ்சாபை மொழிவாரி மாகாணமாக்காததால், சீக்கியர் இயக்கம்வளர்ந்ததென்று சுட்டிக்காட்டி, காங்கிரஸ் தலைமையைத் தாக்கிப் பேசியிருக்கிறார்—ஆனால், 'தலைமை' அவர்மீது 'நான்செனஸை' வீசவில்லை, லட்சுமிசந்த்மீதும் வீசவில்லை. ஆனால், தென்னாட்டார்மீது வீசியிருக்கிறது!

காரணம் என்ன? ஒருவர் சீக்கியர். அவர்தம் சீற்றம் கூடாதென்பதா! மற்றொருவர் மராட்டியர், விளைவு விபரீதம் ஆகுமென்பதாலா!

அவர்களைக் கண்டிக்கத் துணியவில்லை, பண்டிதர். ஆனால், நம்மவர்மீது மட்டும், 'நக்கல்' மொழியை எறிகிறார்!

சீக்கியரைவிட, மராட்டியரைவிட தென்னாட்டார் கோழைகள் என்பதாலா—இந்தக் கூற்றை, அவர் வீசியதற்குக் காரணம்.

முன்பு, நம்மீது! இப்போது 'அவர்கள்' என்று அழைக்கப்பட வேண்டும் என்ற ஆவலிலிருக்கும் தேசிய நண்பர்கள்மீது!! — பொதுவாக, தென்னாட்டின்மீது.

தென்னாட்டை, இவ்வளவு இளப்பமாகக் கருதுவதேன், பண்டிதர்?

'திராவிடரியக்கத்துக்குச் சரியான சூடு கொடுத்தார்!' என்று சந்தோஷமடைந்தீர்களே, நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள் — 'வெட்டவெளி' வீசுகிறது, வேதனையான சுடு சொல்! திராவிடரியக்கத்தின்மீதுமட்டுமல்ல — உங்களையும் எங்களையும் தாங்கிக் கிடக்கும் தென்னாட்டின்மீது!!

★

புயல் நிவாரண நிதி

[இதுவரை]

	ரூ. அ. பை
முன் கணக்குப்படி	11887—15—11
ஆம்பூர் 'பரப்பிரம்ம' நாடக மூலம்	1900—0—0
மேட்டுப்பாளையம் தி. மு. க. கிளை	181—8—0
கான்பூர் எஸ். சுந்தரம் மூலம்	24—0—0
சென்னை பச்சையப்பன் கல்லூரி ஹாஸ்டல் தொழிலாளர்கள் பி. கே. மூர்த்தி மூலம்	25—10—0
சென்னிமலை தி. மு. க. கிளை	15—0—0
மதுரை கலைத்தாசன்	9—15—0
குன்றத்தூர் தி. மு. க. கிளை	6—0—0
டெல்லி ராணுவத்தோழர்கள் T. K. சங்கரன் மூலம்	12—0—0
சண்முகநாதன்	1—1—0
கடம்பூர் தி. மு. க கிளை	9—5—0
தனுகேசு	1—0—0
பாலகிருஷ்ணன்	1—0—0
எஸ். வி. ராகவன்	0—4—0
நஞ்சுகவுண்டன் பாளையம் எஸ். ஆர். மாணிக்கம்	3—0—0
காதக் கேட்டை தி. மு. க. கிளை	2—0—0
எ. ஜான்	1—0—0
டிராப்ட் மூலம் ஒரு தோழர் (கரூர் வைசியா பாங்க் டிராப்ட்)	25—0—0
சென்ட்ரல் ஸ்டேஷன் மாடர்ன் கேப் தொழிலாளர்	20—0—0
நாசிங்கபுரம் தி. மு. க. கிளை	21—4—0
ஆக மொத்தம்	14146—14—11

நலிந்தோர் வாழ்வு நிமிர நன்கொடை அளியுங்கள். நன்கொடைகள் அனுப்புவோர் முகவரியுடன் அனுப்ப வேண்டுகிறேன்.

மு. கருணாநிதி,
நிதிக் குழு செயலாளர்,

6. கோபாலபுரம் முதல் தெரு, சென்னை 6.

புயல் நிவாரண நிதி

தஞ்சை திருச்சி மாவட்டங்களின் புயல் நிவாரண நிதிக்காக தி. மு. கழகத்தின் பொதுக் குழுவின் வாயிலாக இதுவரை ஏறத்தாழ பதினையாயிரம் ரூபாய் வசூலாகியிருக்கிறது. இன்னும் பாக்கியுள்ள தொகையை—சேலம், கோவை, மதுராந்தகம் முதலிய இடங்களிலுள்ள நாடக மூலமும் கோலார்—பெங்களூர்—விருதுநகர் — கூட்ட நிகழ்ச்சிகள் மூலமும் வசூலிக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. கூடியவரை பிப்ரவரிமாத இறுதிக்குள் எண்ணிய தொகை பூர்த்தியாகி விடுவதற்கான முயற்சியில் தோழர்கள் ஈடுபட வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மு. கருணாநிதி,
நிதிக் குழு செயலாளர்.

தமிழ்நாட்டு நகரசபை உறுப்பினர்கள் மாநாடு

தமிழ்நாட்டு நகரசபை உறுப்பினர்கள் மாநாட்டை, பிப்ரவரி மாதத்தில் திருச்சியில் நடத்த முடிவுசெய்யப்பட்டு, அதற்கான ஓர் வரவேற்புக் கமிட்டியும் அமைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

பொங்கல் மலர்

'திராவிட நாடு' பொங்கல் மலர் தேவை என்பதாகப் பலர் இன்னும் கடிதங்கள் எழுதியவண்ணம் உள்ளனர். தேவையான பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்திருந்தும், கவனியாதிருந்துவிட்டு, இப்போது மலர் தேவையென்றால் எப்படி அனுப்புவது? தேவைக்கு மேல் அச்சிடாததால், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

சந்தாதாரர்களுக்கு

எட்டணா அதிகப்படியாக அனுப்பிய எல்லாச் சந்தாதாரர்களுக்கும் பொங்கல்மலர் தவறாமல் அனுப்பப்பட்டிருந்தும், சிலர் தங்களுக்கு மலர் கிடைக்கவில்லை என்று எழுதித்தொல்லை தருகிறார்கள். ஒருவர் இருவருக்கு மலர் கிடைக்கவில்லை என்றால், அனுப்புவதில் தவறிருக்கலாம் என்று கருதி மீண்டும் அவர்களுக்கு அனுப்பலாம்; நூற்றுக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் தங்களுக்கு மலர் கிடைக்கவில்லை என்று எழுதினால், அதற்கு நாம் எப்படிப் பொறுப்பாக இருக்கமுடியும் என்பதைச் சந்தா நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்.

காஞ்சி] 1—2—53 [ஞாயிறு

"நற்சாட்சிப் பத்திரம்"

★

மக்கள் கூடியிருந்தார்கள்;
முன்போல திரண்டு கிடக்க வில்லை!

'ஜெய்ஹிந்த்' — முழக்கம் கேட்டது;
முன்பிருந்த தென்பு இல்லை!

'நேருவுக்கு ஜே!'–இந்த ஒலியும் கிளம்பியது;
மாநாட்டில் அவரை எதிர்த்தோரும் இருந்தனர்!

'பிரிவினை'யை தாக்கி காங்கிரஸ் தலைவர் பேசினர்;
தென்னாட்டுக்கு '5–ஆண்டு திட்டத்தால்' பயனில்லையென்று செங்கல்வராயன் போன்றோர் சொல்லினர்!

அண்மையில் ஐதராபாத்தில் கூடிக் கலைந்த, காங்கிரஸ் இயக்கத்தின் 58-வது மாநாடு குறித்து, இத்தகைய செய்திகளைக் கண்ணுற்றோம் நாம். தெந்தின பாடும் தேசிய ஏடுகள் கூட, சோகமயமான எழுத்துக்களையே உதிர்த்திருக்கின்றன. தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட காங்கிரஸ் பிரதிநிதிகளில் பாதிப் பேர், மாநாட்டுக்குச் செல்லவில்லையாம்.

மக்களிடையில் ஆர்வம் இல்லை! காங்கிரசாருக்குள்ளும் ஓர் ஆர்வம் காணப்படவில்லை!!–இவ்வித கோலாகலத்துடன் 'நாணல் நகர்' மாநாடு நடந்து முடிந்திருக்கிறது.

அரசியல் வாழ்விலீடுபட்டோருக்கு, காங்கிரஸ் இயக்கத்துக் கேற்பட்டிருக்கும் இத்தகைய 'சீரழிவும் அவமானமும்', நல்லதோர் எச்சரிக்கையாகும்.

காங்கிரஸ் இயக்கம் சாமான்யமானதில்லை! ஒரு நாட்டின் விடுதலை இயக்கமாக வளர்ந்தது அது–பெரிய பெரிய வீரர்களின் கண்ணீராலும் இரத்தத்தாலும் வளர்க்கப்பட்டது—இன்றும் அவர்களில் சிலரின் 'ஜோதி'யைப் பெற்றிருப்பது—58 வயது கொண்டது. அத்தகைய ஓர் இயக்கத்தின் மாநாடு, "கூடியது! கலைந்தது!!" என்று சோகத்தோடு, இந்த இயக்கத்தைச் சேர்ந்தோராலேயே தெரிவிக்கப்படுகிறதென்றால், அது காட்டிடும் பாடம் மிகமிக முக்கியமாகும்!

இன்று நாட்டை ஆள்வது—அது.

பிரச்சாரபலம் மிக்கது!

பணபலம், வாய்ந்தது.

உலக முழுமையும், தெரிந்தது.

எனினும் மக்கள், அங்கு போக விரும்பவில்லை! கட்சியின் பிரதிநிதிகளும் 'கூடும் — கலையும். போய் என்ன செய்யப்போகிறோம்?' என்று கருதிப் போகவில்லை!கலந்து கொள்ளவில்லை!!

காங்கிரஸ் இயக்கத்தின் பழைய காலத்தை—நாம், ஏளனப்படுத்தி விட முடியாது. அது பெற்றிருந்த, மக்கள் சக்தியும், சாதாரணமானதல்ல! 'இந்தியா முழுமைக்கும் ஓர் சங்கம்!!–என்று பாடினர்–உண்மையுங்கூட அதுதான். அவ்வளவு தூரம், மனதெல்லாம் நிறைந்து கிடந்த, அம்மாபெரும் இயக்கத்தின் மாநாட்டிற்கு வர, மக்கள் தயங்குகிறார்கள்! மக்களாவது போகட்டும்—காங்கிரசின் தூதர்களே தயங்குகிறார்கள்!!

மக்களுக்கு காங்கிரசின் போக்கில் குறைகாண வழியுண்டு–கடந்த கால ஆட்சியில் கண்ட அல்லல்களால் மனம் வேதனையடைந்திருக்கலாம்; ஆகவே, போக விரும்பாமலிருக்கலாம். ஆனால், காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு, என்ன வந்தது? எது, அவர்களைப் போகாமற் செய்தது' என், ஆர்வம், உண்டாகவில்லை நாணல் நகர் செல்ல?

இந்த 'விசித்திரம்' குறித்து, நாம் சிந்திக்காமலே, பதில் ஒன்று கிடைத்திருக்கிறது. இதற்கான பதிலைத் தந்தவர், நம்மவரல்ல! 'துரோகி', 'பேத மனப்பான்மை கொண்டவன்', என்றெல்லாம் காங்கிரஸ் சநோதரர்களால் வர்ணிக்கப்படும் மாற்றுக் கட்சிக்காரரல்ல. காங்கிரஸ் தலைவர்களால் பாராட்டப் பெற்றவர்! டில்லி வந்ததும் பண்டித நேருவின் கைலாகு பெற்றவர்! இந்திய சுயராஜ்யத்துக்கு ஒத்துழைத்தவர்–எனப் பாராட்டப் பெற்றவர்! பிரிட்டிஷ் முதலமைச்சராக இருந்த அட்லீ, காங்கிரசின் நிலை குறித்து, எழுதியுள்ளார்—அந்தக் கட்டுரையில், நமது சந்தேகத்துக்கான பதில் இருக்கிறது.

காங்கிரஸ் சீரழிந்து வருகிறது. அதில் பிற்போக்கு வாதிகள் நிறைந்து விட்டார்கள்.

இவ்விதம், அட்லி அவர்கள், 58—வயதான காங்கிரஸ் இயக்கம் குறித்து, தீட்டியுள்ளார். அவர், அவர்களது நண்பர்! நண்பரின் நற்சாட்சிப் பத்திரம், இது!–அதுவும் இங்கே வந்து பார்த்துச் சென்றபின், தருவது.

பிற்போக்கு வாதிகள்!—யாரார் என்பது,நம்மைவிடக்காங்கிரஸ் தலைமையினருக்கு நன்கு தெரியும். அவர்கள்தான், இன்று காங்கிரசின் தூண்களாக மாறியிருக்கிறார்கள். நரம்பையும் எலும்பையும், கையையும் காலையும், இழந்து அந்த மாளிகையைக் கட்டிய ஏழைத் தொண்டன், இன்று அங்கில்லை! பிடிவாதமாக அங்கு இருக்க முயன்றாலும், அவனுக்கு 'கல்தா' கொடுக்கும் 'சக்தி'களே புகுந்து கொட்டமடிக்கின்றன!!

இந்தச் 'சக்தி'களைத்தான், 'பிற்போக்குச்சக்தி'–யென்கிறார் அட்லி.

இந்தச் 'சக்தி'களைத்தான்—முதலாளிகள், கொள்ளைலாபக்காரர்கள், பதவிவேட்டைக்காரர்கள் என்று கூறுகிறோம்.

இந்தச் சக்திகள், காங்கிரஸ் இயக்கத்தில் வளர்ந்த விதத்தையும், அவை வாழும்விதத்தையும், நம்மைவிட, உண்மைக் காங்கிரஸ்காரர்கள் நன்குஅறிவார்கள். அவ்விதம் அவர்கள் உணரத்தலைப்பட்டதின் விளைவுதான் பிரஜா கட்சி—கிருஷிக்லோக் கட்சி — பிரஜாபரிஷத் முதலிய கட்சிகள்; தாண்டன் தலைவராயிருந்த போது இந்தப்'பிரிவினைப் படலங்கள்' அதிகமாகியதைக் கண்ட பண்டித நேரு, ஆர்வத்தோடு வந்தார்—தனது 'ஜோதி'யைக் காட்டினர் — 'அதிர்ச்சிக்கு வைத்யம்' என்றார் —'புது இரத்தம்' என்றார். இவ்வளவும் அவர் வர்ணித்துக்காட்டியும், நாணல் நகர் மாநாடு. பரிதாபத்தையே பதிலாகத் தருகிறது! காங்கிரஸ், கடந்த தேர்தலில், முறியடிக்கப்பட்டது!!

இதற்குக்காரணம் பண்டித நேருவின் திறமைக் குறைவு என்றோ, ஆர்வமில்லாமை யென்றோ, நாம் காரணம் காட்ட விரும்பவில்லை. அவ்வளவும் இருக்கலாம்! அதனை யாரும், தவறெனக் கூற முடியாது. கட்சி கரைவதைக்காப்பாற்ற முயலுவதில், தவறுமில்லை. ஆனால், அதைக் காப்பாற்ற முன்வருமுன், அதனைக் கரையேற்ற முடியுமா. என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்த்திருக்கத்தான் வேண்டும். ஓடுகின்றது வெள்ளம்! சிக்கியது குதிரை!! — காப்பற்ற வேண்டியதுதான்,குதிரையை வளர்த்தவன்கடமை.ஆனால்,அருகே நெருங்கும்போது குதிரைக்கு மேல்மூச்சு வாங்குகிறது. இன்னும் கொஞ்ச நேரமோ—இப்போதோ! என்ற நிலை. இதனைக் காணுபவர் என்ன செய்வது? குதிரையைப் பிடித்திழுத்தால், ஓடும் வெள்ளத்தில், தானும் குதிரையுடன் உருள நேருமேயொழிய காப்பாற்றிடவா, முடியும்?—இந்த உண்மையை மறந்து விட்டார், பண்டிதர்! விளைவு 'வெட்ட வெளி'யைக் காணுகிறார்–கோபம் வருகிறது—சீறுகிறார்! 'ஓடுங்கள்—மக்களிடம் போய். உழைத்து, மதிப்பைப் பெற்று வாருங்கள். தேசப் புனருத்தாரணமே முக்கியம்' என்று, செப்புகிறார். தலைநரைத்தவளைசப்ரமஞ்சக் கூடத்துக்கு இட்டு வருவதும், கிழப்பசுவைக் கட்டி மேய்ப்பதும், சாக்கடையில் சந்தண அத்தர் தெளிக்கச் சொல்வதும், விழலுக்கு இறைத்த நீர்தானே!

இந்த உண்மையைத்தான், அவரது நண்பர் அட்லி குறிப்பிடுகிறார் —'அது கரைகிறது' என்பதாக.

ஆனல், அந்த உண்மையைப் படிக்கும்போது, பண்டிதர் போன்றோருக்கு ஆத்திரம் வந்தாலும்—அது அவருக்கு சகஜம்தாம்! — வரலாம். காங்கிரஸ் தலைவர்களில் சிலருக்கு—பலருக்கு அல்ல! ஏனெனில், பலர் இப்போது அங்கில்லை–இந்த உண்மை, வேதனை தரக்கூடியதாகவும் இருக்கலாம்.

உண்மை எப்பொழுதுமே கொஞ்சம் கசக்கக்கூடியதுதான்! என்ன செய்வது? உலகமெங்கும் புத்தொளி பரவி வரும் நேரத்தில், பிற்போக்குக் காரிருளில், எத்தனை நாட்களுக்குத்தான் காலம் கழிக்க முடியும்?—இதனைத் 'தலைவர்' எண்ணிப் பார்க்காவிட்டாலும், தேசிய நணபர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தலைவர் எண்ணுவார் என்று நம்ப இடமில்லை — ஏனெனில் 'காங்கிரஸ் தலைமைப்பதவியை ஏற்றது நிர்வாகப் பிரதமர் பதவிக்குச் சங்கடம் வராமலிருக்கவே!' என்றே பண்டிதர் கருதுவதாக அறிகிறோம். அதனாலேயே, இரண்டினையும் அவர் வகிக்க விரும்புகிறாராம்! இது, அவரைப் பொறுத்தமட்டில், வசதியானதுதான்-சிக்கலைக் குறைப்பதுதான், ஆனல், இந்த 'முடி'யையும் அவர் சூட்டிக்கொள்வதால், என்ன லாபம் ஏற்படமுடியும், காங்கிரஸ் இயக்கத்துக்கு?

இதனை எண்ணிப் பார்க்கவேண்டும், தேசிய நண்பர்கள்!—'நாணல் நகர்' மாநாடு முடிந்த சில தினங்களுக்கெல்லாம் 'குடியரசு தினமும்' வந்துபோய்விட்டது. மூன்றாவது குடியரசு நாள்! எங்கே மக்களிடம் புது ஆனந்தம்? மகிழ்வு உண்டா! இன்பம் கண்டோமா!! 'டில்லி' சர்க்கார் சம்பந்தப்பட்ட காரியாலயங்களில் மின்சார விளக்கொளி அதிகமாக இருந்ததே தவிர, மக்களின் அகத்திலும் முகத்திலும் வேதனைக் காரிருளைத்தானே காண்கிறோம்! என்ன காரணம் இதற்கு? கடந்த கால ஆட்சியில், சர்க்கார், மக்களுக்கு மகிழ்வை உண்டாக்கும் நன்மைகளை நிறைவேற்றவில்லை, என்பதுதானே. அந்த வேதனைக்கு யார் காரணம்? சர்க்காரை இயக்கும் காங்கிரஸ் கட்சிதான் இவ்வளவுக்கும் காரணம்—இது, மக்கள் எண்ணம்.

மக்களின் இந்த எண்ணத்தைத்தான் 'அட்லீ' சுட்டிக் காட்டுகிறார்.

அதைத்தான், நாமும் எடுத்துக் கூறிவருகிறோம்.

அதனை மெய்ப்பிப்பது போல, 'நாணல் நகர்' மாநாடும், சோகமாக இருந்திருக்கிறது.

இதனை எண்ணிப் பார்க்கவேண்டும்—நமது நண்பர்கள்.

மாளிகை–மண்மேடாகி வருகிறது! பாம்புப் புற்றுகள் அதிகமாகி விட்டன!!—இனிப் பாசம், பலன் தராது.

★

மதமும்—தமிழ் மொழியும்

வடமொழியின் உதவியின்றி எவ்விதத்திலும் இயங்க முடியாத சைவம் முதலான ஆரிய மதங்களும், வடமொழியின் துணையின்றி அம்மதங்களை விளக்க முடியாத மத நூல்களும் தமிழ்நாட்டில் இருக்கும் வரை தமிழ் மொழிக்குத் தனித்தியங்கும் வாய்ப்பும்—தமிழ் மக்களுக்குத் தன்மதிப்போடு வாழும் இயல்பும் ஏற்படாதென்பது ஒரு முடிந்த முடிவு. சைவ சித்தாந்தத்தை விளக்கிக்கூறும் 'சிவஞான போதம்' முதலாகவுள்ள பதினான்கு நூல்களையும், ஏனைச் சமய நூல்களையும் நன்கு அலசிப் பார்ப்பவர்க்கு. வடமொழி இல்லையேற் சமயம் (மதம்) இல்லை என்ற மறுக்க முடியாத உண்மை வெள்ளிடைமலை போற் றெள்ளிதிற் புலனாவதோடு, தமிழ் மொழியின் தனித்தியங்கும் வாய்ப்பும் மதத்தால் கெட்டழிந்தது—இனியுங் கெட்டழியும் என்ற உண்மையும் அங்கை நெல்லிக்கனியென அறியப்படும். அன்றியுஞ், மதந் தமிழ் நாட்டில் தலைகாட்டாத பண்டைக் காலத்தில், அதாவது, தொல்காப்பியர் காலம் முதல் திருவள்ளுவர் காலம் வரை இருந்த தமிழ்ப் புலவரால் இயற்றப் பெற்ற இலக்கிய–இலக்கண நூல்களில் வடமொழிக் கலப்பு இல்லாதிருந்தலையும், திருவள்ளுவர் காலத்திற்கு பின் இருந்த புலவர்களால் இயற்றப் பெற்ற தமிழ் நூல்களில் வடமொழிக் கலப்பு நிறைந்திருத்தலையும் நடுநின்று ஒப்புநோக்கிப் பார்ப்பவர்க்கு, ஆரிய மதமான சைவத்தினுல் ஒப்புயர்வற்ற தமிழ் மொழிக்கு ஏற்பட்ட தீமைகள் எவ்வளவின என்பது நனகு விளங்கும். இனித், தொல்காப்பியத்திலும் திருக்குறளிலுஞ் சிற்சில வடசொற்கள் காணப்படுகின்றனவே, அதற்குக் கூறும் மாற்றம் யாதெனின், தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் வரும் நாலைந்து வடசொற்கள், ஒரு சமயச் சார்பு பற்றிய சொற்கள் அல்லவென்பதூஉம், அவை, வடதிசைப் பார்ப்பனர் தென்திசைக்கு வந்து, இங்குள்ள தமிழ் மக்களோடு வைத்துக் கொண்ட பேச்சு வழக்கினுல் பட்ட 'திசைச் சொற்களே' என்பதூஉம் தெளிந்தறிய வல்லார்க்கு, அவை ஒரு சமயச் சார்பு பற்றிய சொற்களல்ல வென்பது நன்கு புலனாகும். இனிச், சைவமும் அதன் தலைவனான சிவமும், தொல்காப்பியர் காலத்திலே அன்றித் திருவள்ளுவர் காலத்திலே இருந்திருக்குமானால், சைவத்தைப் பற்றியுஞ் சிவனைப் பற்றியும் தொல்காபயித்திலுந் திருக்குறளிலும் பேசப்பட்டிருக்குமன்றோ! 'சிவம்' 'சைவம்' என்ற சொற்களே தொல்காப்பியத்திலோ அன்றித் திருக்குறளிலோ இல்லாமல் இருக்கும் போது: அவற்றுட் காணப்படும் வடசொற்களைச் சைவத்தைக் குறிக்குஞ் சொற்கள் என்று எவரேனுங் கூறுவரேல், அத்தகையினர் அறிவு, மதமெனும் நோய் ... தத்தால் குழப்பம் அடைந்திருக்கின்றதென்றே மெய்யறிவுடையோர் கொள்வர்.

புத்தம் புதிய பொருள்! சித்தம் கவர்கிறது!!

விஞ்ஞானிகளுக்கோர் விருந்தாம்! வியக்கத்தக்க சாதனங்களைச் செய்யமுடியுமாம்!!

காண்பது அரிதாம்—விலைமதிக்க முடியாததாம்.

எத்திக்கும் 'புகழ்' மணக்கச் செய்யலாமாம் — 'அப்பொருள் இருக்கும் பூமி சிறந்ததெனக் கொண்டாடப்படுமாம்.

அத்தகைய புத்தம் புதியதோர் பொருள்! — கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பொருளின் உதவியால் அணுசக்தியைப் பெறமுடியுமாம்—அருமையான பலகாரியங்களுக்கு உபயோகப்படுத்த முடியுமாம்.

வியப்போடு வெளியிடுகிறார்கள்! ஆச்சரியத்தோடு கூறுகிறார்கள்!!

அவ்வளவு மதிப்பும், பெருமையும் கொண்டதோர் 'பொருள்' திராவிடத்தின் மடியிலே! ஆமாம், தோழர்களே, நம் அரும் திராவிட மண்ணிலேதான்!! அதன் பெயர் வேண்டுமா?—சேரலேட் — திகைக்காதீர்கள், சேரனின் மண்ணிலேதான் கிடைக்கிறது. "சேரனா! — அது யார்!" என்று கேட்குமளவுக்குக் கருத்தைச் செவிடாக்கிக் கொண்டிருக்கும், 'கனவான்'கள் உண்டு. சிலப்பதிகாரமெனும் சிறப்புறு ஆபரணத்தை ஆக்கித்தந்த இளங்கோவடிகளின் இன்பத்திருவிடத்திலேதான் அந்த அரிய 'பொருள்' அகப்பட்டிருக்கிறது. சேரபூமியில், கிடைத்ததால் அதற்கு சேரலேட் (Cheralite) என்று, பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

'திருவாங்கூர்லேட்' என்றோ, 'இந்தியலேட்' என்றோ, அதற்குப் பெயர் சூட்டவில்லை — சேரலேட்! அரிதான பொருள் — அருமையான பெயர்,

அந்த 'சேரலேட்' திருவாங்கூர் பூமியிலே, அகப்பட்டிருக்கிறது. அந்தப் பொருளின் மகத்துவம் குறித்து, பற்பலவிதமாகப் புகழ்கிறார்கள்.

புகழ்வதும், யார், தெரியுமோ! 'நம்ம சர்க்கார் அல்ல. அவர்களுக்கேது நேரம்? ஆண்டவனுக்கும் அடியார்களுக்குமிடையே 'சமரசம்' செய்துவைக்கவே, நேரமில்லையே! அதிலும் இப்போது, திருவரங்கத்து அய்யங்கார்கள் வேறு, 'வடகலை—தென்கலை'ப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களாம்!! அக்கார வடிசல் படைக்கப்பட்டதா, ஆண்டவனை நன்கு அர்ச்சித்தார்களா, ஆஸ்தீகம் வளர வழி யாது, நாஸ்தீகர் என்று யாரைத் திட்டலாம், 'திருப்பாவை'யின்பெயர் போதுமா மாநாடுகூட்ட — 'திருவெம்பாவை'யையும் சேர்த்துக்கொள்ளலாமா? என்கிற 'பெரும்' பிரச்னைகளுக்கே 'நம்ம சர்க்காருக்கு' நேரமில்லாதிருக்கும்போது, கேவலம் இந்த இகலோகத்தில ஏதோ ஒரு பொருளை — அகப்பட்டதை எண்ணிப் புகழத்தான் நேரமுண்டா! மகிழத்தான் செய்வார்களா!!

'நம்ம சர்க்கார்' அல்ல — புகழ்வதும், மகிழ்வதும். புதைபொருள் ஆராய்ச்சியைச் செய்த வல்லுனர்தாம், அந்தப் பொருளைப்பற்றிப் பாராட்டுகின்றனர். "ஓகோ! மத்திய சர்க்காருக்கு புதைபொருள்களைப்பற்றி எப்போதுமே அலாதியான அக்கரையுண்டு. அதிலும், பண்டித நேருவைத் தலைவராகக் கொண்டிருக்கும் இடமாயிற்றே?—புதிய பொருள்! அதுவும் விஞ்ஞானிகள் வியக்கக்கூடிய பொருள்!! என்றால், மகிழாமலும், பேசாமலுமா இருப்பார்கள்? அதுவும் ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, நாட்டின் வளங்களையெல்லாம் வளர்க்கவேண்டுமென்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிற நேரமாயிற்றே!" என்று, எண்ணுவீர்கள்.

பூமியிலிருக்கும் பொருள்களைத் தோண்டிப் பார்க்கவும், எடுத்து அனுபவிக்கவும் அதிகாரம் பெற்றவர்கள் டில்லியார்தான்! ஆனால், ஐயோபாவம் — அவர்களுமல்ல — இந்த ஆனந்தத்தை அனுபவிப்பது!

ஆறுயிரம் மைல்களுக்கப்பால், அலைகடல்களைத் தாண்டிவந்த ஆங்கிலேயர், தமது லண்டன் மாநகரிலே, சேரலேட்டின், சிறப்பைக் கண்டு பூரிக்கிறார்கள்! புதியதோர் பொருள்—என்று தெரிவிக்கிறார்கள்!!

'சேரலேட்'டின் புகழைக்குறித்து டில்லி, உணரவில்லை.

உணரவில்லையென்றால், உணரக் கூடாது — அதன் அருமையைத் தெரிந்துகொள்ள முடியாது என்பதல்ல:

அத்தகைய 'கஷ்டசாத்தியமான வேலையில் ஈடுபடவில்லை-பாராட்டுப் பெறவும், பல நாட்டுத் தூதர்களை வழியனுப்பவும் — வரவேற்கவும், விருந்துக்குப் போகவும், விதவித மானபிரசங்கங்களைத் தயாரிக்கவுமே 'எவ்வளவு' பிரயாசை, தேவைப்படுகிறது, 'நம்ம' ஜோதிகளுக்கு? ஆகவே, இந்த 'சிறிய' வேலையை—'வேலையில்லாத' — கேவலம், விஞ்ஞானத்தைக் கட்டி அழும்!—வெளிநாட்டாருக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

அவர்கள், அந்தப் பொருளின், அருமையை ரசிக்கிறார்கள்! பொறுமையிருந்தாலும், பூரிப்போடு வெளியிட்டிருக்கிறார்கள்!! —'புத்தம் புதியபொருள்! சித்தம் கவர்கிறது!' எனும், விதமாக.

சித்தம் கவரும் புத்தம் புதிய பொருள் அகப்படும் இடம், சேரநாடு—திருவாங்கூர்ப்பகுதி. இந்தப் பொருளின் மகத்துவத்தை அறிவிப்போர் போவி. ஹார்ன் எனும் ஆங்கிலேய அறிஞர்கள்! அந்தப் பொருள் ஆராய்ச்சி செய்யப்பட்ட இடம், லண்டன் பூகோளஆராய்ச்சி மியூசியம்!!

உலகம் வியக்கத்தக்க தோரியம்—யுரேனியம் எனும் இரு பொருள்களும், இந்த 'சேரலேட்'டில், அடங்கியுள்ளதாம்.

இதனை அவர்கள் அறிவிக்கிறார்கள்! அறிவிக்கும் அவர்களுக்கு, ஆனந்தம் — ஆராய்ந்து கண்டுபிடித்தோம், என்பதால். ஆனால், அகண்ட இந்தியாவும் எமதே' இமயமும் குமரியும் எம்முடையதே!! இதோபாரீர், புதுத்திட்டங்களை! இங்கே அணைகட்டுகிறோம்—அதோ, புதியதோர் தொழிற்சாலை நிர்மாணிக்கிறோம்' என்று, படம் எடுத்துக் காட்டும் பண்டிதரின் அரசவையினர்க்கு, தம்மைப் பற்றி ஆடம்பரப்படுத்திக் காட்டத்தான், ஆனந்தம் கொள்ளத்தெரிகிறது! 'அரிய பொருள்' காணவோ, காணும்படி பிறர் வேண்டினால் ஈடுபடவோ, ஈடுபடப் பிறர் முயன்றாலும் 'ஏது பணம்?' என்ற பல்லவியைப் பாடித் தடுக்கவோதான் முடிகிறது! — அவ்வளவு அசிரத்தை, இங்கு. ஆனால், ஆறாயிரம் மைல்களுக்கப்பால் சேரபூமியின் ஒளி வீசுகிறது! அதைக் கேட்டு நாமும், "இதெல்லாம் இருக்கிறதாம், இங்கு?" என்று வியப்போடும் பேசிக்கொள்ளும்படியான நிலை நீடிக்கிறது!!

திராவிடத்தாயின் மடியிலே, இன்னும் நமக்கென, எவ்வளவு செல்வங்கள் உள்ளனவோ? எப்போது நாம் அவைகளைத் தேடிக் கண்டு ஆனந்தம் அடைவோமோ? பயன் பெறுவோமோ?

★

'காரைக்கால்' சம்பவம்

தேசீய ஏடுகள் பித்தலாட்டம்

[காரையில் 11—1—53 தேதி நடைபெற்ற கழகக் கூட்டம் பற்றி தேசிய ஏடுகள் வெளியிட்ட தவறான செய்திகளை மறுத்து தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர் தோழர் இரே. இளம்வழுதி M. A. B. L., விடுத்திருக்கும் அறிக்கை]

11—1—53ல் காரைக்கால் தி. மு. க. திறப்பு விழா மிகவும் போற்றத் தகுந்த முறையில் நடைபெற்றது. (எனது தலைமையில்) தாமரைச்செல்வன், இராதாமணாளன் ஆகியோர்களும் கலந்து கொண்டனர். கழகத் துவக்க விழா மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெற்றது. நமது கழகத்திற்கு காரைக்காலில் ஏற்பட்ட செல்வாக்கைக் கண்டு ஆத்திரப்பட்ட சில சுயநலப் பேர்வழிகள் தேசிய ஏடுகளுக்கு பித்தலாட்டமான செய்தியை அனுப்பி தமக்குத்தாமே "திருப்தி" அடைந்துகொண்டு இருக்கின்றனர்.

14—1—53 வெளியூர் 'தினமணி' 'சுதேசமித்திரன்' ஆகிய இதழ்களில் விஷமக்காரர்கள் கொடுத்துள்ள செய்தி வெளியாகியுள்ளதை யொட்டி, பொதுமக்களுக்கும் குறிப்பாக கழகத் தோழர்களுக்கும் அங்கு நடந்ததை விளக்க வேண்டிய அவசியத்திலிருக்கிறேன்.

காரைக்காலில் தி. மு. க. கழகம் ஆரம்பிக்க நமது தோழர்கள் முயற்சி எடுத்தபோது பிரெஞ்சு அரசாங்கத்திற்கு எதிரான கட்சி தி. மு. க. என்று (நமக்கு பெருமைதானே) ஸ்தல சமூக ஊழியர் எனப்படுவோர்கள் பிரெஞ்சி அரசாங்கத்திடம் காவடி தூக்கினர் நடைபெறாமல் தடுக்க. அவர்களின் இந்த முயற்சி பரிதாபப்படும் வகையில் படுதோல்வி அடைந்தது. உள்ளூர் ஜோதி சினிமாக் கொட்டகையில் 11—1—53 காலை 10-மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயிற்று. நான் கழகத் திற புவிழாச்சொற்பொழிவு ஆற்றும்போது, சில கேள்வித்தாள்கள் என்னிடம் கொடுக்கப்பட்டன. 'தினமணி' 'மித்திரனில்' வந்தசெய்தியைப்போல் யாரும் எழுந்திருந்து கேட்கவோ பேசவோ இல்லை. அந்தக் கேள்விகளில் ஒன்று மாகில மாநாட்டின் 27-வது தீர்மானம், பிரஞ்சு இந்தியா பற்றியது — அது ஏன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதாகும். அதற்கு நான் பதிலளிக்கையில், "எங்களுக்கு இப்போது திராவிட நாடு போராட்டந்தான் முதன்மையானதும், முக்கியமானதுமாகும். திராவிடம் பிரியும்போது காரைக்கால் போன்ற பிரதேசங்களின் விவகாரம் தீர்மானிக்கப்படும்—திராவிடம் பிரியும்போது திராவிட நாடு எல்லைக்குள் உள்ள எல்லாப்பிரதேசமும் திராவிடர் ஆட்சியில் தான் இருக்கும். அவசியமேற்பட்டால் அதற்கு தனி போராட்டமும் நடத்தப்படும். உதாரணமாக காங்கிரசார் சுயராஜ்யத்திற்குப் போராடியபோது சுதேச சமஸ்தானங்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று தீர்மானம் போட்டிருந்தாலும் ஆங்கிலேயரிடம் நடத்த வேண்டிய போராட்டம்தான் முக்கியமானது என்று அவர்கள் கருதியதால் சமஸ்தானங்களின் விவகாரம் ஒன்றும் செய்யப்படவில்லை. சுயராஜ்யம் கிடைத்த பிறகே சமஸ்தானங்களின் விவகாரம் கவனிக்கப்பட்டது" என்பதாகப் பேசினேன். இது காரைக்கால் சப்இன்ஸ்பெக்டர் குறிப்பில்கூட இருக்கலாம்.

என் பேச்சின்போது மேற்படி சமூக ஊழியர் கே. எம். சுப்ரமணியம் எழுந்து பேசவும் இல்லை. மேடைக்கு அருகில் வரவுமில்லை. அப்படி சொல்வது கலப்பற்ற பொய். எனக்குப்பின் தோழர் தாமரைச் செல்வன் பேசும்போது பொதுவாக சென்னை மாகாணத்தின் (மக்களின்) கஷ்டங்களைப்பற்றியும் புயல் நிலைமைபற்றியும் பேசினர். மத்திய அரசாங்கம் புயல்நிவாரணத்திற்கு உதவ முன் வராததைப் பற்றியும், காரைக்கால் அரசாங்கம் உடனடியாக உதவி செய்தது குறித்தும் பேசினர். அப்போது கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதாகவும் அதனால் தலைவர் கூட்டத்தை முடித்துவிட்டார் என்றும் மேற்படி பத்திரிகைகளின் செய்தி கூறுவது முழுப்பொய். அதற்குப் பிறகு தலைவர் முடிவுரை கூறி, பின் செயலாளர் நன்றி கூறியபின், திறப்புவிழா நடந்த சினிமாக்கொட்டகையில் "பராசக்தி" படம் நடந்து கொண்டு இருப்பதால் சினிமா மூலம் "வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிடநாடு" என்ற பாட்டை பாடச்செய்து பொதுமக்களும் அதை ரசித்த பிறகே கூட்டம் அமைதியாகக் குழப்பம் என்ற வார்த்தைக்குசிறிதும்இடமில்லாமல் கலைந்தது.

நமது கூட்டத்தைப்பற்றி விஷமச் செய்தியை வெளியிட்டு வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் அற்பபுத்தியை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

செத்துவரும் காங்கிரஸ், சவக்குழியில் உள்ள ஆரியம், சாகப் போகும் வடநாட்டு ஏகாதிபத்யம் இல்லாத ஒன்றைக்கற்பித்து, நடக்காத ஒன்றை நாளும் கலம் தியப்புடன் வெளியிடுவதால், வளர்ந்து கொண்டு உள்ள நம் இயக்கத்தை நசுக்கி விடலாம் என கனவு காண்கின்றனர் போலும்!

இவர்கள் நினைப்பதுபோல் நமது கழகத்தைப்பற்றி பொய்யான செய்திகளைக்கொண்டு அழித்து விடமுடியாது.

கடைசியாக கழகத் தோழர்களுக்கு ஒரு வார்த்தை. மேற்படி பத்திரிகைகள் நம் கூட்டத்தைப் பற்றி ஏதாவது கலகமோ, காலித்தனமோ, கூச்சலோ, குழப்பமோ பொதுமக்கள் ஆத்திரப்பட்டனர் என்பனபோன்ற செய்திகள்தான் ஒரு கேலிச் சித்திரம் தீட்டி விட்டு உதறித் தள்ளுங்கள். பொய்யும், புளுகும் பித்தலாட்டமும் அவைகளின் பிறவிக்குணம். அதனால் கிடைக்கின்ற அற்ப சந்தோஷம் அவர்களுக்கே இருக்கட்டும். நாம் நம் பாதையில் நேராகச்செல்வோம். காரியத்தில் கண்ணாக இருப்போம். கடமை யாற்றுவோம். வெற்றிபெறுவோமாக!

தங்களன்புள்ள,

இரெ. இளம்வழுதி

குமுறல்

ப. உ. சண்முகம்

பயங்கரச் செய்தி!

ஒருவர் இருவரல்ல, பன்னிரண்டு லட்சம் மக்களுக்கு!

உணவு ரேஷன் கார்டில்லை!

கல்வி வசதியில்லை!

வைத்திய வசதி இல்லை!

உலகத்தையே உலுக்கி யிருக்க வேண்டிய செய்தி! அலட்சியமாக விடப்பட்டுள்ளது. வாழப் பிறந்த நாட்டிலே, வாழ வழி இல்லாது, வாழப் போன நாட்டிலே, வதைக்கப்படுகின்றனர். கொடுமை! அவதியுறுபவரின் அவலக்குரல், வல்லரசுகளின் செவிகட்கு எட்டாது; காரணம், அவர்கள் அணுகுண்டை மனிதர்கள்மீது போட்டுப் பரிட்சை பார்த்துக்கொண்டிருக்கும்'நற்பணி'யில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால். ஆனால், நல்லவர்கள் ஆட்சியென்று சொல்லப்படும் காந்திசீடர்களுக்குக் கேட்டிருக்கவேண்டுமே!

நாணல் நகரிலே கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே இதுபற்றிய தீர்மானம் நிறைவேறியதாகப்பெருமை பேசும் தேசியத் தோழர்கள் சிந்திக்கவேண்டும்! தீர்மானம், கொடுங்கோலாட்சியைக் கண்டிக்கவில்லை, எச்சரிக்கை விடவுமில்லை! தன் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. உதைப்பவரைக் கண்டிக்கவில்லை. உதைபட்ட இடம் வலிக்கிறதே என்கிறது. வேடிக்கை!...வேதனை கலந்தது! வீரம் மறைந்தது!

சிங்களம் சிறிய நாடு. பன்முறை தமிழர்கள், (சேதுபந்தனம் கட்டியல்ல) சுழலும் வாளேந்தி, கலமேறி கடல் கடந்து சிங்களத்தை வென்றதுண்டு! இத்தகைய சிறிய நாட்டைச் சூலமேந்திய பாரதமாதாவின் சற்புத்திரர்கள், ஏது காரணம்பற்றியோ கண்டிக்க அஞ்சுகின்றனர்!

பாகிஸ்தானில் அவதியுற்ற வட இந்தியர்களுக்கு வலிய வக்காலத்து வாங்கி வீர முழக்கமிட்டவர்களெல்லாம் ஏன் வாயடைத்துப் போயிருக்கிறார்கள்? போர் மூளுமென்று பாகிஸ்தானைப் பயமுறுத்தியவர்களெல்லாம், ஏன் சிங்களத்தில் அவதியுறும் தமிழர்களுக்காக வாதாட மறுக்கின்றனர்! பாகிஸ்தானைவிடச் சிங்களம் பலம்பொருந்திய நாடா? வடஇந்திய அகதிகளுக்குச் சலுகை! கடல் கடந்த தமிழர்களுக்குத் துரோகம்! இதுதான் தேசியமா?

'டட்லி சேனநாயகா' அறிவிக்கிறார், 'நேரு விரும்பினால் அனைவரையுமே கப்பலில் ஏற்றி அனுப்புகிறேன்'' என்று. அநாகரிகமான அறிக்கை. அந்நாட்டு அதிபருக்கு நாம் அறிவுறுத்துகிறோம், இது முறையன்று என்று. மற்றொன்றும் அவர்கட்கு ஞாபகமூட்டுகிறோம். நேரு சர்க்கார் சிங்களத்தில் அவதியுறும் தமிழர்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்களென்று. நேரு சர்க்கார் வட இந்திய அகதிகளை ஆதரிக்கத்தான் அமைந்திருக்கிறதேயொழிய, திராவிட அகதிகளை ஆதரிக்க அல்ல. இதைவிடத்தமிழர்களைக்கலமேற்றி அணுகுண்டுப் பரீட்சைக்காக அமெரிக்கா அனுப்பினால் நேரு சர்க்கார் நலம் என்று கருதும்!

பிழைக்க ஓடினர்! சிங்களம் சித்ரவதை செய்கிறது! எங்கே போவார்கள், அவர்கள்? பிறந்த நாட்டிலே ஆலைவாய்க் கரும்புபோல் அவதியுற்றனர், ஓடினர், உயிர் தப்ப! சிக்கிவிட்டனர், சிலந்திக்கூட்டிலே! கடும்புலி வாழும் காட்டில் வாழ அஞ்சி ஓடி, கொடுங்கோல் ஆட்சியிலே அகப்பட்டுவிட்டனர்!

தேயிலைக் காட்டை விட்டு தேன்மதுர நாட்டிற்குத் திரும்ப விருப்பமிருக்கும், அவர்கட்கு. ஆனால், தேன்மதுர நாடு வந்தால், தேளும் பாம்புமன்றோ அவர்களை வதைக்கும்! தாயகம் பேயகமாக மாறியதை அறிந்துதானே வெளியேறினர். பிறந்த இடத்திலே புயல்! பிழைப்புத் தேடித்போன இடத்திலே பூகம்பம்! முட்புதரினின்றும் வெளியேறி முள்ளம் பன்றியிடம் சிக்கிய புள்ளிமானைப்போல, சமுதாயத்தின் சாட்டை அடி தாளாது ஓடி, கங்காணியின் கசையடியும் சர்க்காரின் சவுக்கடியும் பட்டுப் பாதவிக்கின்றனர்!

மூவேந்தரை ஈன்ற முத்தமிழ் நாடே! உன் மடியிலே பிறந்தோரை நீ மறந்ததேனோ? சரிதம் புகழும் சங்கத் திருநாடே! உன் சந்ததியினர் வேற்று நாட்டில் வெந்து சாவதை நீ கேட்டும் உறங்குவதேன்! அமிழ்து மொழியை அவனுக்கு அள்ளித் தந்திட்ட அருமைத் தாய் நாடே! சாகாத அம்மொழியீன்ற புதல்வர்கள் செத்து மடிவதைக் கண்டும் நீ மௌனமாயிருப்பதேன்? இழித்துரைத்த கனகவிசயரை விலங்கிட்டு இழுத்து வந்த வீரத் திருநாடே! உன் குழந்தைகள் வதைக்கப்பட்டும் நீ வாயடைத்துப் போனதேன்? கரிகாலனுக்குக் குற்றவேல் புரிந்த சிங்களம் கரிகாலன் சந்ததியினரை வதைப்பதா! ஐயகோ!...... இந்நாட்டிலே விவேகம் தான் செத்து விட்டதென்றாலும், மானம் கூடவா விற்கப்பட்டு விட்டது! ஒற்றுமை தான் குன்றி விட்டதென்றால், இனப்பற்றுக், கூடவா அற்றுவிட்டது! வாளேந்தும் வகையை மறந்து அந்நியன் தாளேந்தத் துணிந்ததென்றால், அவன் உதைக்கக் காலோங்கிய போதும் கூடவா வாய்பொத்தி நிற்பது!

மனிதர்கள்தான் சுயநலம் காரணமாக மறந்தார்களென்றால், இத்திருவிடத்திலே திருக்கோயில்கள் பூண்டிருக்கும் தெய்வங்களுமா மறந்தன! பொற்கூடலிலே திரு நடனம் புரியும் தில்லையோனே! வெள்ளி ரிஷபம் ஏறி வீதிவலம் வரும் அண்ணாமலையானே! தங்கத்தேர் ஏறி திருவலம் வரும் திருச்செந்தூரானே! வைரநகை பூண்டவரதனே! வெள்ளியம்பலத்திலே கொலு விற்றிருக்கும் சொக்கேசனே! நீங்கள் மறந்ததேன்! எந்தத் தமிழிலே தேவாரமும் திருமொழியும் திருவாசகமும் பிரபந்தமும் பாடினார்களோ, அதே தமிழ் பேசும் மக்களன்றோ, இன்று சிங்களத்திலே வதைகின்றனா! உயரிய மதிற்சுவர்களும் உன்னத கோபுரங்களும் கட்டி, பன்னீராலும் பாலாலும் நித்தம் உங்களைக் கழுவி, பட்டாடையுடுத்திப் பல கோடி வைரங்களை காணிக்கையாகத் தந்தவர்களின் சந்ததியினரை நீங்கள் மறந்ததேன்! தாய் நாட்டை மறந்து வேற்று நாட்டாராக மாறினாலும் உங்களை மறக்காதவர்களை நீங்கள் மறந்தது நியாயமா! துரோகமல்லவா?

தாயகம் கைவிட்டது! தெய்வங்களும் மறந்தன! போய் வாழ்ந்த இடமும் விரட்டுகிறது! பிறந்தநாடு, போற்றி வாழ்ந்த தெய்வங்கள், உழைப்பால் உயர்ந்தவர்கள், எல்லாம் கைவிட்டால் எங்கே போவார்கள்? யாரைப்போய் நோவார்கள்· திராவிடர் நிலை இன்று இதுதானு?

★

அகிம்சா ஆட்சியினரே!

வாழ்வுச் சுமையால் வதையும் போலீசாரைப் பழிவாங்காதீர்! குறைகளைப் போக்கி; வாழச் செய்வீர்!

கண்டேன்; திகைத்தேன்!

[ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

பம்பாய் தாராவி என்றால் நல்லதொரு இடமாக இருக்கும் என்று நினைத்தேன். நேரில் தாராவியைத் தரிசித்தபோது பம்பாய் தாராவி பாழடைந்த இடமாக சுடுகாடு போன்று காட்சியளிக்கக் கண்டேன். ஆயிரமாயிரம் தமிழர்கள் இங்கு வாழ்கிறார்கள் என்று சொல்வதைவிட, தினமும் வதைகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். சென்னை மாகாணத்திலே உள்ள சேரிகளைவிட மிக மிகக் கேவலமாக மண் குடிசைகளும், கிழிந்த சாக்குகளால் ஆக்கப்பட்ட கூடாரங்களும் எட்டு அடி அகல நீளமுள்ள குடிசைகளிலே நான்கு பேர்களுக்குக் குறையாமல் குடியிருந்து கொண்டும் சென்னைத் தமிழர்கள் பம்பாயில் கொடுமைப்பட்டு வருகிறார்கள்.

சிறைச்சாலைகளில் உள்ள அறைகளில் நீள அகலம் அதிகமானதாகவும், காற்றோட்டமானதாகவும் சுகாதாரமானதாகவும் உள்ளன என்று சொல்லாலம். ஆனால், பம்பாய் தாராவியிலே தமிழ் மக்கள் வாழும் குடிசைகள் சிறைச்சாலைகளைவிட மோசமாகக் காட்சியளிக்கின்றன. சாதாரண பஞ்சாயத்து போர்டின் நிர்வாகத்தின்கீழுள்ள கிராமம்கூட சுத்தமாக, சுகமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பம்பாய் தாராவியைப் பார்க்கிறபோது, பம்பாய் கார்ப்பரேஷன், அதற்கு மேயர், கமிஷனர், அங்கத்தினர்கள் ஆகியோர் இருக்கிறார்களா, செத்துவிட்டார்களா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. பம்பாய் கார்ப்பரேஷன் மனது வைத்தால் ஓட்டைக் குடிசையிலே வாழுகிற தாராவி தமிழர்கட்கு கூட்டுறவுத் திட்டபடி குறைந்த வாடகையில் சிறந்த சிறு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். பல நகர சபைகள் இதைச் செய்கின்றன. சென்னை சர்க்கார்,கார்ப்பரேஷன், கோயமுத்தூர் நகரசபை ஆகியவை வடநாட்டவர் என்று கருதப்படுகிற அகதிகட்கு அழகான வீடு அமைத்துக் கொடுக்கவும் வேலை வாங்கிக் கொடுக்கவும் ரொக்கக்கடன் கொடுக்கவுமான காரியங்களிலீடுபட்டும், தாராவியில் வாழுகிற தமிழர்கட்கு பம்பாய் சர்க்காரோ கார்ப்பரேஷனே; தாராவிப் பகுதியில் தன் கடமையைச் செய்யத் தவறியது வருந்தத் தக்கது மட்டுமல்ல, கண்டிக்கக் கூடியதுமாகும். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராசர் தாராவிக்கு வந்து விட்டுப் போயிருந்தார் என்று கேள்விப்பட்டேன். 'மந்திரி மேக்கர்' என்று மதிக்கப்படுகிற காமராசர் தாராவியில் வாழுகிற தன் நாட்டு சகோதரர்கள் நிலைமையைப்பற்றிப்பம்பாய் சர்க்காருக்காவது சென்னை சர்க்காருக்காவது அறிவித்திருந்தால் கூட ஏதாவது நன்மை கிடைத்திருக்கும். உலகத்தில் ஒவ்வொரு இடமும் வேகமாக முன்னேறிக்கொண்டு போகும் இந்தக்காலத்திலே தாராவி நாளுக்கு நாள், தாழ்ந்து கொண்டே போகிறது. சென்னைத் தலைவர்களும் அரசாங்கமும் தாராவிப் பகுதியின் கேவல நிலையை மாற்ற தக்க நடவடிக்கை உடனே எடுக்கவேண்டும், தாராவியிலே வாழுகிற தமிழ் மக்களும் சாதிமத கட்சி பேதமின்றி ஐக்கியப்பட்டு ஆவன செய்ய வேண்டும்.

★

நாம் கூறவில்லை

"இந்தி ஒரு கதம்ப மொழி."

"பலர் பல விதமாகப் பேசுகிறார்கள்"

"தமிழ் ஒரு தனி மொழி"

"வேறு எந்த மொழியும் அதற்கு இணை இல்லை"

காந்தியார் பேசிய இந்தி சரியல்ல!

கவர்னர் தரும் அத்தாட்சி

இவை நாம் கூறுவதல்ல. சென்னைக் கவர்னர், தாம்பரத்திலுள்ள இந்திப் பள்ளிக்கூட ஆண்டு விழாவில் பேசும்போது கூறியுள்ளார். இதோ முழு விவரம்:-

"ஹிந்தி என்து சொந்த பாஷையாக இருப்பதனுல் எனக்குத் தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதர பிரதேச பாஷைகள் பாதகமடையும்படி ஹிந்தியைப் பரப்புவதை விரும்பாதவர்களில் நானும் ஒருவன் என்று ஒளிவு மறைவின்றிக் கூறுகிறேன்.

பலர் பலவிதமாக ஹிந்தியைப் பேசுகிறார்கள். பண்டிதர்கள் ஒரு விதமாகவும், பிரசாரகர்கள் வேறு ஒரு விதமாகவும் பேசுகிறார்கள். இதனல் ஹிந்தி மொழிதான் கெடுகிறது. காந்திஜி ஹிந்தி பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனல் அவர் பேசிய ஹிந்தி சரியல்ல. மகாத்மாவைப் பலர் பின்பற்றி அவ்வாறே பேச ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய தாய்பாஷை தேசியமொழியானல் அது இவ்வாறு 'கொலை' செய்யப்படும் என்று அஞ்சியே அது தேசியபாஷை ஆகவேண்டாமென்று நினைத்தேன்.

ஹிந்தி பாஷையைப் பிறர் கற்க வேண்டுமென்று நினைப்பவர்கள். இதர பாஷைகளைக் கற்காமல் சோம்பேறிகளாய் இருக்கலாம் என்று நினைக்கிறார்கள். பிறர் ஹிந்தியைக் கற்றுக்கொள்ள கஷ்டப்படுவதைப் போலவே அவர்கள் இதர மொழிகளையும் கற்கவேண்டும்.

மதராஸிகள் இதர பாஷைகளைப் பேசுவதில் திறமை பெற்றவர்கள். தென்னிந்திய மக்கள் ஹிந்தியைச் சரியான உச்சரிப்புடன் பேசுகிறார்கள்.

தமிழ்மொழி விறு விறுப்பானது. இனிமையானது, அழகானது. சென்ற 2000 வருஷங்களாக அது ஒரே மாதிரியாகப்பேசப்பட்டு வருகிறது. உலகில் உள்ள வேறெந்த மொழிபற்றியும் இவ்விதம் கூறமுடியாது.

ஹிந்தியை யார்மீதும் திணிப்பதில் எனக்கு விருப்பம் கிடையாது. சகல பிரதேச பாஷைகளும் முன்னேற்ற மடையவேண்டுமென்பதே எனது விருப்பமாகும்."

இவ்வாறு அவர் கூறியதால் அவருக்குத் தமிழ்மொழியிடத்து அளவு கடந்த பற்றுதல் ஏற்பட்டு விட்டதென்று கருதிவிட வேண்டாம். இன்றைக்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியும், சூழ்நிலையும் இந்தியையே தாய்மொழியாகக் கொண்ட கவர்னர் அவர்களைக் கூட உண்மையை மறைக்காமல் பேசும்படி செய்துவிட்டது. இதனை இந்தி வெறியர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

★

நெசவாளர் நாள்

[தி. மு. க. வின் கைத்தறித் துணி விற்பனை நாளில் பல இடங்களில் நடைபெற்ற செய்திகள் — மக்களின் கண்களுக்குப் படாமல், தினசரி இதழ்களால் மறைக்கப் பட்டுவிட்டன. பல சிறப்புகளுடன் நடைபெற்ற 4-ந் தேதியின் முழு விபரங்களையும், தருமளவுக்கு நமது ஏடு இடந்தாவில்லை. எனவே, ஓரளவு சுருக்கித் தந்திருந்தோம் — முன்பு. விடு பட்டுப்போன நிகழ்ச்சிகள், கீழே:-]

நெல்லை ஆத்தூர்: இல. அ. மகராசன், சு. கலைச்செல்வன் ஆகியோர்,

நாகர்கோவில்: என். எஸ். இளங்கோ, வி. சுப்ரமணியம், ஜான், எஸ். சுப்ரமணியம், எஸ்.வி நாதன், எ. ராமசாமி, கே. சுப்ரமணியம், பூதலிங்கம், பிச்சாண்டி, மதியழகன், ஆகியோர். ரூ. 570—0—0

குமாரபாளையம்:- எஸ். எஸ். எம். சுப்ரமணியம் தலைமையில் விற்பனை ரூ 703—0—6

இடைக்காட்டூர்:-எஸ்.வி. அன்பில் அபூபக்கர், எம். அப்துல் வஹாப் ஜான். ரூ. 25—0—0

திருமானூர்:— செயலாளர் எம். சுப்ரமணியம் தலைமையில் விற்பனை செய்தனர்.

திட்டக்குடி:- விற்பனை ரூ. 200.

எண்கண்:-வீ. ருத்திராபதி, எஸ். டி. சம்பந்தம், எஸ். தனராசு, எஸ். மாணிக்கம், எஸ். இராமச்சந்திரன், வீ. கோவிந்தசாமி, பி. கோவிந்தராசு. ரூ. 54—4—0

இலத்தூர்:- இரா. திருமலைக் குமார், மாணிக்கம், சேகர், ஆ. செல்லப் பாண்டியன், கடைய நல்லூர் திராவிடமணி.

புஞ்சைப்புளியம்பட்டி:- பி. எ. சாமிநாதன், பி. எ. முத்துசாமி, பி. எஸ். இராசு, பி. எஸ். சமக் பி. இராமசாமி, பி. டி. வரதஇராசு, பி. கே. பழனிச்சாமி, பி. கே. சுப்பிரமணி, பி. கே. முத்துவேலாயுதம், எம். வரதய்யன், பி. கே. ஆறுமுகம், பி. எஸ். சீத்தாராமன், ஆர், அருணாசலர், ஆர். பி. இராமசாமி, ஆர். குப்புசாமி அப்பாசாமி, பி. டி. ரங்கசாமி, பி. எம். ரங்கசாமி, பி. எம். இராசமாணிக்கம், கரிவரதராசன், மாரப்பன், கோவிந்தன் எ. அண்ணாமலை, நாகராஜன், எ. ராமசாமி, பி.எம். சுப்பையன், வெங்கடாசலம், பி. கே. ரங்கசாமி ஆகியோர் விற்பனை செய்தனர்.

மணக்கால்:. என். ஆர். வீரப்பா, விசுவநாதம், கா. சக்கரபாணி ரூ. 255—0—0

திருவாரூர்:- டாக்டர் விசயராகவன், கருணை எம்.ஜமால், சேதுபதி, சதாசிவம், தென்னன், முகைதீன், பிச்சை, நஞ்சப்பன், வாஞ்சிலிங்கம், நாராயணசாமி, அமிர்தலிங்கம், கருப்பையன், ஆகியோர். ரூ. 650

மேலப்பழூர்:- கழக நிர்வாகிகள் விற்பனை செய்தனர்.

தேனி:- கே. காதர் மைதீன், கு. ராசா, கே. பி. பி. எம். நாராயணசாமி, செ. அய்யப்பன், கா. சிவகாமி நாதன், சோ. வெற்றி அரசு, பொ. பு. துரைராசன், சோ. பழனிச்சாமி, எம். சோமசுந்தரம், வி. வி. பாண்டியன், பாலாத்து லிங்கம், ஆ. கருப்பையா, எஸ். எஸ். ராசு, பா. மாடசாமி, கு. வெள்ளைச்சாமி, ஆகியோர். ரூ. 1058—1—3

திருமங்கலம்:- ஆர். எஸ். தங்கப் பழம், கு. ப. ம. தர்மன், B. com., கிருஷ்ணசாமி, துரை அரசு, இராசாக், மன்னூர், திப்பு சுல்தான், பொன்னு லிங்கம், மஜீத், சிதம்பரம், காட்டு வாசிக்கந்தர், நடராசன், கலைநேசன், பக்கீர், அண்ணாமலை, தனுக்கோடி, கந்தன், ரத்தினம் பி. எ., காசிம் கோஸ் முகம்மது, ஆகியோர். ரூ. 800—0—0

தேவபாண்டலம்: விற்பனை ரூ. 1502—0—0

வல்லவராயன்பட்டி:- செ. கரிகாலன், ஏ. பி. முத்துவெள்ளை, ரா. மூக்கையா, எஸ். கே. அழகர் ஆகியோர்.

சைதாப்பேட்டை:- (சென்னை) சி. வி. ராசன், பி. அண்ணாமலை, ஆகியோர் ரூ. 504—0—0

ஆவடி: துரைசாமி, கோவிந்தசாமி, ஆகியோர். ரூ. 300—0—0

சிறுத் தொண்ட நெல்லூர்:- விற்பனை ரூ. 237—8—6

★

தி. மு. க. கட்டிட திறப்பு விழா

சென்னை எழுகிணறு 9-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழக கட்டிட திறப்பு விழா 18-1-53 ஞாயிறுகாலை 10-மணிக்கு நெ. 3 பெரியண்ணமுதலி தெருவில் இன்னிசை முழக்கத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முடிவில் செயலாளர் எ. எஸ் ராமன் மேற்படி கழக கட்டிட திறப்பு விழாவிற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூற விழா சிறப்புற முடிவுற்றது.

பழம்நீகடை:-
சி. ஆர். இரத்தின முதலியார் & சன்ஸ்
80, திருப்பள்ளித்தெரு
சென்னை-1.
60-ஆண்டுகளாக அளவிறந்த புகழுடையது. ஆடவரும் பெண்டிரும் அணியவேண்டிய பட்டு நூல் கைத்தறி துணிகள் அனைத்தும் கிடைக்கும்.

மாதவிடாய் நின்றுபோனதா?
நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CSL/688
எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அனுகூலமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)
கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266
12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை ரூ. 15-0-0 (தபால் செலவு தனி)
சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
M/grs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

தன்னம்பிக்கை வேண்டும்

[ரால்ப் வால்டோ எமர்சன்]

நாம் இன்று மனிதராகப் பிறந்திருக்கிறோம். நாம் ஒன்றும் செய்ய முடியாதவர்கள் அல்ல. நாம் புரட்சிக்கு அஞ்சியோடும் கோழைகள் அல்ல. நாம் வழிகாட்டிகள், மீட்பவர்கள்; நன்மை செய்கிறவர்கள்; குழப்பத்தையும், காரிருளையும் கடந்துசெல்லவேண்டியவர்கள்.

ஒருவன் தன் கையையே தனக்கு உதவியாகக் கொள்ளவேண்டுமென்பதை ஜன சமூகம் விரும்பவில்லை. புதிதாய் ஒன்றை ஆக்கவேண்டும் என்னும் பேச்சையே ஜன சமூகம் வெறுக்கிறது; பழைய பெயர்களையும் பழக்க வழக்கங்களையும் அது போற்றுகிறது.

மனிதனாய் வாழ விரும்புவோன் வழக்கத்திற்கு இணங்காதவனாகத் தான் இருத்தல்வேண்டும். உன் மனத்தின் நேர்மையையன்றி மற்றையதொன்றும் சிறந்ததாகாது.

இறந்துபட்ட பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தால் உன் ஆற்றல் சிதைந்துபோகும்; உன் காலம் வீணாகும்; உன் பண்பில் மாசு படியும்.

உன் கடமையை நிறைவேற்று, நீ உன் வேலையைச் செய்தால் உன் ஆற்றல் பெருகும்.

வழக்கத்துக்கு அடிமைப்படுவது கண்கட்டி விளையாடுவது போன்றது. ஒருவர் விரிவுரை நிகழ்த்துகிறார், அவர் தாம் உறுப்பினராயுள்ள அமைப்பு என்றும் நிலவுதல் வேண்டும் என்றும் சொல்கிறார். புதிய கருத்தொன்றும் சொல்ல அவரால் இயலாது என்பது எனக்கு முன்னரே தெரியும்.

பழைய அமைப்பு நின்று நிலவ வேண்டும் என்பதற்கு அவர் காரணங்கள் காட்டுகிறார். ஒரே திசையையன்றி வேறு திசையை அவர் நோக்கமாட்டார். இவை எனக்குத் தெரியும்.

பலர் யாதேனும் ஓர் பழங்கொள்கைக்கு உரிமைபூண்டு வாழ்கின்றனர். அவர்கள் உண்மை யென்பதெல்லாம் முற்றும் உண்மையாகாது அவர்கள் இரண்டு என்பது உண்மையான இரண்டு அன்று; அவர்கள் நான்கு என்பது உண்மையான நான்கு அன்று. அவர்கள் உரைக்கும் ஒவ்வொரு சொல்லும் நம் மனத்தை வருத்துகின்றது; அவர்களைச் சீர்திருத்தும் முறை நமக்குத் தெரியவில்லை.

நாம் முன்னே செய்தவாறே செய்யவேண்டுமென்றும், முன்னே பேசியவாறே பேசவேண்டுமென்றும் கருதுகிறோம். முன்னே சொன்னதற்கு முரண்பாடாகப் பேசலாகாதென்று ஏன் நினைக்க வேண்டும்?

அறிவிற் சிறந்த பெரியார்கள் அவ்வாறு கருதமாட்டார்கள். இன்று நீ நினைப்பவற்றைத் திருத்தமாகச் சொல்; நேற்று நீ கொண்ட கருத்தையே இன்றும் சொல்ல வேண்டியதில்லை. நேற்றுச் சொன்னதை இன்று மாற்றிச் சொல்வதற்கு அஞ்சாதே.

உன்னைப்பற்றி மற்றவர்கள் தவறாக எண்ணுவார்கள். பிறர், தவறாகக் கருதினால் என்ன? பைத்தகோரஸ், சாக்ரட்டீஸ், லூதர், காப்பர்நிசியஸ், கலிலியோ, நியூட்டன், இவர்களையும், மற்றும் மெய்யறிவு படைத்த பெரியாரையும் மற்றவர்கள் தவறாகவே கருதினார்கள். பெரியார் அனைவரும் தவறாகவே கருதப்படுவர்.

ஒவ்வொருவரும் அவரவர் தகுதியை அறிந்துகொள்ளல் வேண்டும்; உலகம் தனக்காகவே இருக்கின்றது என்று எண்ணுதல் வேண்டும். யாசகன் போலவோ, ஒதுக்கப் பட்டவன்போலவோ, வேண்டாதவனாகவோ வாழ்தலாகாது.

ஆட்சி, அதிகாரம், செல்வம் இவற்றைக் கொண்டே மக்களை வேறுபடுத்துவதா? அரசனாயினும் ஆண்டியாயினும், வாழ்க்கைக் குரியவை இருவருக்கும் பொதுவானவைகளே. ஒருவரை மதிப்பதும் மற்றவரை மதியாதிருப்பதும் ஏனோ?

பழமைக்கு ஏன் வணக்கம் செலுத்துதல் வேண்டும்? நெடுங்காலமாக மனித ஆன்மாவுக்குள்ள அதிகாரத்துக்குக் கேடு சூழப்பெற்றுள்ளது. ஆன்மா ஒளி மயமானது. அது இன்று ஒளியாய் விளங்குதல் வேண்டும்.

"நான் இவ்வாறு நினைக்கிறேன்" என்று சொல்லப் பலர் அஞ்சுகின்றனர். அவர்கள் யாரேனும் ஒருவரது பெயரையோ, அறிஞர் ஒருவரது நூலையோ மேற்கோளாகக் காட்டுகின்றனர். என் வீட்டுக்கு முன் பூத்துள்ள மலர்கள் பழம் பெருமையால் வாழவில்லை. இன்று அவை அழகாய்த் தோன்றுகின்றன; மணம் பரப்புகின்றன. அவை பழைமை சொல்லிச் சிறப்புப் பெற வேண்டியதில்லை.

மனிதனே அவ்வாறு வாழ்கிறானில்லை. அவன் கண்கள் பழைமையையே நோக்குகின்றன. அவன், தான் இன்று வாழவேண்டியவாறு இக்காலத்திற்குரியவனாய் வாழாவிட்டால், அவன் வலிமையும் மகிழ்ச்சியும் உள்ளவனாக இருக்கமுடியாது.

நீ உண்மை காணும்போது அது பழைய நெறிபற்றித் தோன்றியதென்று எண்ணலாகாது. பழம் பெயர்களைக் கண்டு சொல்லவேண்டியதில்லை. நீ கண்ட உண்மை முற்றும் புதுமையானதாக இருக்கலாம். பழைமையைக் காட்டி அதன் சிறப்பை நீ நிலைநாட்ட வேண்டியதில்லை.

இயற்கையில் காணும் ஒவ்வொன்றும் தனக்குத்தானே உதவிசெய்து கொள்கிறது. அவ்வாறு இல்லாவிட்டால் ஒன்றும் வாழமுடியாது. காற்றடிக்கும்போது மரம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு தானே வளைந்து கொடுத்துப் பின்னால் எழுந்துவிடுகிறது. விலங்கினங்களும் தங்கள் உயிரைத் தாங்களே பாதுகாத்துக்கொள்கின்றன.

வாழ்க்கையின் எத்துறையிலும் எந்நிலையிலும் உள்ளவர்கள் அனைவரும் "தன்கையே தனக்கு உதவி" என்னும் உண்மையை உணர்ந்து ஒழுகவேண்டும். அத்தகைய நிலை ஏற்பட்டால் எல்லாத் துறைகளிலும் மாறுதல் நிகழும்

ஒவ்வொரு காலத்துக் கலைகளும் அக்காலத்தில் கண்டு பிடிக்கப் பட்டவை மக்களுக்குப் புத்துயிர் ஊட்டுவதில்லை. கலிலியோ சாதாரணப் பூதக் கண்ணாடியின் துணையால் வான மண்டலத்தின் மாண்பைக் கண்டார். கொலம்பஸ் சாதாரணக் கப்பலில் பிரயாணம் செய்து புது உலகத்தைக் கண்டு பிடித்தார்.

ஜன சமூகம் அலைபோன்றது. அலை முன்னே அடித்துச் செல்கிறது; அதனை ஆக்கிய தண்ணீரோ முன்னே போவதில்லை. இன்று ஒரு நாட்டை நாடாக ஆக்குவோர் அடுத்த ஆண்டு இறந்து விடுகிறார்கள்; அவர்கள் அநுபவமும் அவர்களோடு அழிகிறது.

தன்னம்பிக்கை யில்லாதவனே தன் உடைமையைச் சார்ந்திருக்கிறான்; தன்னைச் சார்ந்திராதவனே அரசாங்கங்களைச் சார்ந்திருக்கிறான்.

தன்னால்தான் தனக்கு சமாதானம் ஏற்படும். கொள்கைகள் வெற்றியடைந்தால் தான் மன அமைதி ஏற்படும்.

✱